பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

23 03 2024 7 15
சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தலில் பணபலத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் நாடு முழுவதும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

2. அரசியல் கட்சிகள் பிரச்சாரத்தின்போது கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்தியபிரதா சாஹூ இன்று சென்னையில் ஆலோசனை நடத்தினார்.

3. நாட்டின் நீதித்துறை செயல்பாடுகள் குறித்து ஜெர்மனி தெரிவித்த கருத்துக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

4. ரஷ்யா-வில் 90 பேர் உயிரிழக்கக் காரணமான தீவிரவாத தாக்குதலுக்கு ஐ நா மற்றும் உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தாவில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஹைதராபாத் - கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

----- <u>*இனி விரிவான செய்திகள்*</u> ----

**[]<<<>>>[]**

மக்களவை தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் நாடு முழுவதும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தலின்போது வாக்குச்சாவடிகளில் போதிய வசதிகள் ஏற்படுத்தித் தருவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பாக, மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் வாக்குச்சாவடி மையங்களில் ஏற்படுத்தியிருப்பதை மாவட்ட தேர்தல் அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்தியபிரதாசாஹூ அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் இன்று சென்னையில் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தேர்தல் பிரச்சாரத்தின்போது அரசியல் கட்சிகள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

பதற்றம் நிறைந்த வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பை பலப்படுத்துவது, வெளிப்படையான வாக்குப்பதிவை உறுதி செய்வது, மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது உள்ளிட்டவை குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் 18 – 19 வயதுக்கு உட்பட்ட ஒரு கோடியே 80 லட்சம் முதல்முறை வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை செலுத்த உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

சமூக வலைதளங்கள் மூலமாக முதல்முறை வாக்காளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பிரச்சாரங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலைப் பகுதியில் வசிக்கும் பழங்குடியின மக்கள் பாரம்பரிய நடனமாடி விழிப்புணர்வு ஏற்டுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( சவுண்ட்பைட் - அனுராதா ) --- 38 செகண்ட்*

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரில் மக்களவைத் தேர்தல் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக காவல்துறையினர் 24 மணி நேர தொலைபேசி தகவல் மையத்தை தொடங்கியுள்ளனர்.

தேர்தல் தொடர்பான சந்தேகங்களுக்கு இந்த மையத்தின் உதவியை பொதுமக்கள் நடலாம்.

மக்களவைத் தேர்தலை நம்பகத்தன்மையுடனும், வெளிப்படைத் தன்மையுடனும் நடத்துவதற்கு இந்த தகவல் உதவி மையம் உதவிகரமாக இருக்கும் என்று ஜம்மு-கஷ்மீர் காவல்துறை தெரிவித்துள்ளது.

தேர்தல் விதிமீறல்கள் தொடர்பாகவும் புகார்களை தெரிவிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமது இரண்டு நாள் பூட்டான் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று புதுதில்லி திரும்பினார்.

இது தொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் பூட்டான் மன்னர் மற்றும் பிரதமரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது இருதரப்பு உறவுகளுக்கு மேலும் வலுசேர்க்கும் என்று தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு மக்கள் அளித்த வரவேற்பு மற்றும் விருந்தோம்பல் பாராட்டுதலுக்குரியது என்றும் அவர் கூறியுள்ளார்.

புதுதில்லி புறப்படும் முன் திரு நரேந்திரமோடியும், பூட்டான் பிரதமர் திரு Tshering Tobgay-யும் திம்புவில் ஜெட்சன் பேமா தாய்சேய் நல மருத்துவமனையை தொடங்கி வைத்தனர்.

இந்தியாவின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனையில் 150 படுக்கை வசதிகள் இடம்பெற்றுள்ளன.

[]<<<>>>[]

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர் மூன்று நாள் பயணமாக இன்று சிங்கப்பூர் சென்றடைந்தார்.

நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் மற்றும் இந்திய தேசியப்படை வீரர்கள் நினைவிடங்களில் அவர் மரியாதை செலுத்தினார்.

இது தொடர்பாக திரு ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இந்திய தேசியப்படையை உருவாக்கிய சுபாஷ்சந்திரபோஸின் நாட்டுப்பற்றுக்கு சிங்கப்பூர் மதிப்பளித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பல தலைமுறைகளாக சிங்கப்பூர் மக்களின் நெஞ்சங்களில் சுபாஷ் சந்திரபோஸ் நிறைந்திருப்பதாகவும் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

ரஷ்யாவில் 90 பேர் உயிரிழக்கக் காரணமான தீவிரவாத தாக்குதலுக்கு இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐ நா பொதுச்செயலாளர் திரு ஆண்டானியோ குட்டரஸ், மாஸ்கோவில் உள்ள **Crocus** சிட்டி அரங்கில் நேற்று இரவு நடத்தப்பட்ட இந்த தாக்குதலை கடுமையாக கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய கூட்டமைப்புக்கு ஆதரவு அளிக்கும் வகையில் அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு தர வேண்டுமென்று ஐ நா-வின் பாதுகாப்பு சபையும் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த தாக்குதலுக்குக் காரணமானவர்களை உடனடியாக கண்டறிந்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் ஐ நா வலியுறுத்தியுள்ளது.

மாஸ்கோ தாக்குதலை பிரதமர் திரு நரேந்திரமோடியும் கடுமையாக கண்டித்துள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், பிரான்ஸ், ஸ்பெயின், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளும் இந்த தாக்குதலை கண்டித்துள்ளன.

பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மாக்ரோன், ரஷ்யாவுக்கு பிரான்ஸ் துனை நிற்கும் என்று தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான உதவிகளைச் செய்ய பிரான்ஸ் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாஸ்கோ தாக்குதல் அதிர்ச்சி அளிப்பதாக ஸ்பெயின் கூறியுள்ளது.

இத்தாலிய பிரதமர் திரு ஜார்ஜியா மெலோனியும் பயங்கரவாத தாக்குதலை வன்மையாக கண்டித்துள்ளார்.

இந்த கொடூர தாக்குதல் சம்பவத்துக்கு ஐ எஸ் தீவிரவாத அமைப்பின் **Khorasal** பிரிவு பொறுப்பேற்றுள்ளது.

இதனிடையே ரஷ்ய புலனாய்வு பிரிவினர் இந்த தீவிரவாத தாக்குதல் சம்பத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 93-ஆக உயர்ந்துள்ளதாகக் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக ஜெர்மனி மீது வெளியுறவுத்துறை அமைச்சகம் குற்றம்சாட்டியுள்ளது.

நாட்டின் நீதித்துறை நடவடிக்கைகளிலும், அதன் சுதந்திரமான செயல்பாடுகள் குறித்தும் ஜெர்மனி கருத்துக்களை வெளியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று புதுதில்லியில் உள்ள அந்நாட்டு தூதரை அழைத்து வெளியுறவுத்துறை அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

சட்டம் ஒழுங்கு மற்றும் ஜனநாயக நடைமுறைகள் இந்தியாவில் முழு அளவில் நடைமுறையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ள இந்தியா, உலகின் எந்த பகுதியிலும் இல்லாத அளவுக்கு ஜனநாயக மாண்புகள் நாட்டில் உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்தியாவின் நீதித்துறை செயல்பாடுகள் குறித்து ஜெர்மன் கருத்து தெரிவித்திருப்பது தேவையற்றது என்றும், ஒருதலைப்பட்சமானது என்றும் அப்போது வலியுறுத்தப்பட்டது.

**[]<<<>>>[]**

சத்திஷ்கர் மாநிலம் தண்டேவாடா மாவட்டத்தில் மாவோயிஸ்டுகள் நடத்திய கண்ணிவெடி தாக்குதலில் சிக்கி மத்திய ரிசர்வ் படையின் இரண்டு வீரர்கள் காயமடைந்தனர்.

சி ஆர் பி எப்-யின் பஸ்தார் படையைச் சேர்ந்த இந்த வீரர்கள் நேற்று இரவு கிரந்தூர் வனப்பகுதியில் தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்தபோது தரையில் புதைக்கப்பட்டிருந்த ஐ ஈ டி குண்டுகள் வெடித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்த இரண்டு வீரர்களும் ராய்ப்பூரில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாவோயிஸ்டுகளை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தேடுதல் வேட்டையின்போது பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கி சண்டையின்போது இரண்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

வண்ணங்களின் திருவிழாவான ஹோலிப் பண்டிகை இன்று இலங்கையில் இந்திய நாட்டின் பாரம்பரிய உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

அந்நாட்டு தலைநகர் கொழும்புவில் உள்ள இந்திய கலாச்சார சங்கமும் - சுவாமி விவேகானந்தா கலாச்சார மையமும் இணைந்து நடத்திய இப்பண்டிகையில் இந்திய வம்சாவழியினரும், இலங்கை மக்களும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் இந்தியாவின் பாரம்பரிய உணவு வகைகள் வழங்கப்பட்டன.

பக்த பிரகலாதா, பகவான் ஸ்ரீகிருஷ்ணா ஆகிய மேடை நாடகங்களும் நடைபெற்றன.

ஹோலி பண்டிகையையொட்டி மக்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தாவில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஹைதராபாத் - கொல்கத்தா அணிகள் மோதுகின்றன.

இன்னும் சற்று நேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற ஹைதராபாத் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

**[]<<<>>>[]**

மொஹாலியில் நடைபெற்ற தில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் பஞ்சாப் அணி நான்கு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது,

முன்னதாக டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதையடுத்து களமிறங்கிய தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 174 ரன் எடுத்து.

175 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பஞ்சாப் அணி 19 புள்ளி இரண்டு ஓவரில் ஆறு விக்கெட் இழப்புக்கு 177 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

**[]<<<>>>[]**

**Murcia** ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - **Arjun Kadhe** இணை – ருமேனியாவின் **Vilad victor cornea,** பிரான்ஸின் **Theo Arribage** இணையை எதிர்கொள்கிறது.

***End of News***